Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஆவணி -12 | 29-08-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 192

ASIAN COMPUTER CENTER

...புதிய கற்கை நெறி ...01.09.2003 ... பிற்பகல் 4 மணி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

DIPLOMA IN MS OFFICE

பயிற்சி முடிவில் மேற்படி நிறுவனத்தின் அங்கீகாரத்துடன் சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
செ. சஞ்சீவன்,
2ம் வட்டாரம்,
துர்க்கா வீதி, புதுக்குடியிருப்பு.

(அ-8264)

### அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான குழுவினர்

## லெப். கேணல் நாதன், கப்டன் கஜனின் கல்லறைகளுக்கு வணக்கம் செலுத்தினர்



(பாரிஸ்)

சிங்களக் கைக்கூலிகளால் பிரான்சின் தலைநகர் பாரிசில் சுட்டுக் கொல்லப்பட்ட லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் நினைவாக பாரிசில் அமைக்கப் பட்டுள்ள கல்லறைகளுக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் வணக்கம் செலுத்தியுள்ளனர். இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக ஆராய பாரிஸ் சென்றுள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான மேற்படி குழுவினர் நேற்றுமுன்தினம் இவ் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு இம் மாவீரர்களின் கல்லறைக்கு வணக்கம் செலுத்தினர்.

### புலிகளின் பாரிஸ் கூட்டம் குறித்து

## சிறிலங்காப் பிரதமருக்கு நோர்வேத் தூதுவர் விளக்கம்

பாரிஸ் நகரில் விடுதலைப்புலிகள் இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைவு குறித்து ஆராய்ந்து வருவது தொடர்பாகவும் விடுதலைப்புலிகளின நிலைப்பாடுகள் குறித்தும் நோர்வேத் தூதுவர் சிறிலங்காப் பிரதமருக்கு விளக்கியுள்ளார். நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து உரையாடிய போதே நோர்வேத் தூதுவர் விளக்கியுள்ளார். சுமார்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## 1500 தமிழ் பேசும் பொலிசாரை நியமிக்க அரசாங்கம் முடிவு

### ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

1500 தமிழ் பேசும் பொலிசாரை நியமிக்க தனது அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தமிழ்க் கூட்டமைப்பு முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை நேற்று முன்தினம் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளதாக கொழும்பு இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. சிறிலங்கா பொலிஸ் படையில் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

### சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

# வடக்கு-கிழக்கைப் பிரிக்க எடுக்கும் முயற்சி

# சமாதானத்தின் அத்திவாரத்தைத் தகர்க்கும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிப்பதற்கு சிறிலங்கா சனாதிபதி எடுத்துவரும் முயற்சியை கைவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. அத்துடன் சனாதிபதியின் இத்தகைய முயற்சி சமாதான முன்னெடுப்பின் அத்திவாரத்தை தகர்க்கும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

நேற்றுக் காலை தமிழ்க் கூட்டமைப்பினர் கொழும்பு லிப்ரன் விடுதியில் செய்தியாளர் மாநாட்டில் விடுத்த அறிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இடைக்கால நிர்வாக சபைக்கு, சட்டம் ஒழுங்கு அமுலப்படுத்தும் அதிகாரம் வழங்கப்படுவது அவசியம் என்றும் இதில் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்றும் கூட்டமைப்பினர் கூறியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களின் வரலாற்று வழியான வாழ்விடங்களைக் கொண்ட தமிழ் மொழி பிராந்தியம் தான். பேச்சுவார்த்தை மூலம் காணப்படும் தீர்வுக்கு ஒரே அத்திவாரமாக அமைகின்றது. இந்த அத்திவாரத்தை நாசமடையச் செய்யும் எந்த முயற்சியும் தமிழ் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதான வழியில் அரசியல் தீர்வொன்றை

(IV ஆம் பக்கம் பார்க்க)

### -மட்டக்களப்பில் வெவ்வேறாக-

## புலிகள், படை அதிகாரிகளுடன் கண்காணிப்புக் குழு சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தலைமையிலான குழுவினர் மாவட்டத்தின் போர் நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் குறித்து விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், சிறிலங்கா படைத்துறை அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்புக்கள் தனித்தனியாக அவர்களது அலுவலகங்களில் இடம்பெற்றன. விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை அக்கரைப்பற்று ஆலையடி வேம்பிலுள்ள விடுதலைப் புலி

(IV ஆம் பக்கம் பார்க்க)

### -ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிக்கு-

## புதன்கிழமையில் மட்டுமே வெளியார் செல்ல அனுமதி

பருத்தித்துறைப் பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அமைந்துள்ள பிரபல பாடசாலைகளான ஹாட்லிக் கல்லூரி மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைகளுக்கு புதன் கிழமைகளில் மாத்திரமே வெளியார் செல்ல முடியுமென சிறிலங்காப் படைத்தரப்பு புதிய நடைமுறை ஒன்றை அறிவித்துள்ளது. அத்துடன் அதற்கான அனுமதியை மூன்று தினங்களுக்கு முன்னரே பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தனது கடமையின் நிமித்தம் இப் பாடசாலைகளுக்குச் சென்று பொதுக்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. மு. அரசைப் பதவி கவிழ்க்கவே போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்

### பேரணியின் இறுதியில் விமல் வீரவன்ச

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசைப் பதவி கவிழ்க்கவே இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் தொடரும் இப்போராட்டத்தில் எதிர்க் கட்சிகள் அனைத்தும் பங்கேற்க வேண்டும். நாட்டை அபிவிருத்தி செய்யும் எந்தவொரு தலைவரோடும் இணைந்து பணியாற்றத் தயார். வெளிநாடுகளுக்கு அடிமைப்பட்டிருக்கும் சக்திகளுக்குள் சிக்காமல் தேசிய இலக்கு நோக்கி நடைபயில வேண்டும். இவ்வாறு ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

காலியிலிருந்து கொழும்பு நகரை நேற்றிரவு வந்தடைந்த எதிர்ப்பு ஊர்வலத்தின் முடிவில் லிப்ரன் சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தீப்பற்றி எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் ஒப்படைப்பு

தீப்பற்றி எரிந்து உயிரிழந்த பெண்ணொருவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத அறையில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. புலோலி தெற்கு புற்றளைப் பகுதியைச் சேர்ந்தவரான வேலுப்பிள்ளை சின்னம்மா (வயது 65) என்பவரது சடலமே இதுவென தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. தீப்பற்றியதற்கான காரணம் எதுவும் தெரியவராத நிலையில் பருத்தித்துறை

(IV ஆம் பக்கம் பார்க்க)

## மடு-முருங்கன் பாதையை மக்களின் பாவனைக்குத் திறக்க புலிகள் கோரிக்கை

### - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்குக் கடிதம்

மடு-முருங்கன் வீதியை அப்பகுதி மக்களின் பாவனைக்காக திறந்து விடுமாறு கோரி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்பு தலைமையகத்துக்கு நேற்று கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதியை மதகுருமாரின் பாவனைக்கு மாத்திரம் பயன்படுத்தாது அப்பகுதி மக்களினது சுதந்திரமான பாவனைக்கும் திறந்து விடுமாறும் அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கடந்தவாரம் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் அவர்களைச் சந்தித்தபோது மேற்படி பிரதிநிதிகளிடம் இவ்விடயம் தொடர்பாக நேரடியாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பாதையைத் தமது போக்குவரத்துக்கு திறந்துவிடக் கோரி இப்பகுதி மக்கள் போராட்டம் நடத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வரிவிளம்பரம்

## தவறிவிட்டது

பொன்னுத்துரை தயாபரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (800222613V) 25.08.03 அன்று புளியங்குளத்திற்கும் முறிகண்டிக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (3677)

கந்தசாமி இந்திரநேசன் என்பவரது தேசிய அடையாள அட்டை, பேருந்து நடத்துநர் அடையாள அட்டையும், முகமாலைக்கும், ஸ்கந்தபுரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி, மல்லாவி ஆகிய பேருந்து நிலையத்தில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன. (3679)

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி சேவியர் கடைச் சந்தியில் இருந்து உட்புறமாக 100 யார் தூரத்தில் இல:201, ஜெயந்தி நகரில் அமைந்துள்ள 1 ஏக்கர் காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: செல்வரத்தினம் சர்வசக்தி பதிப்பகம், A/9 றோட், கிளிநொச்சி. (3676)

## பெயர் மாற்றம்

ஒதியமலை நெடுங்கேணி எனும் முகவரி கொண்ட அரியகுட்டி நடனராஜா ஆகிய நான், எனது பெயரை 29.08.2003 இன்றிலிருந்து அரியகுட்டி ஜெயதீபன் என பெயர் மாற்றம் செய்கிறேன். என்னுடனான எத்தேவைக்கும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என உறுதிப் படுத்துகிறேன். அ.ஜெயதீபன். (3489)

# கண்ணிவெடி அகற்றும் பணிக்கு ஐ.நா. அபிவிருத்தித்திட்டம் மேலும் உதவி

(கொழும்பு)

கண்ணிவெடி அகற்றும் பணிகளை மேலும் வலுப்படுத்தும் திட்டத்திற்கு பல வழிகளில் உதவி செய்ய ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டப் பிரிவு முன்வந்துள்ளது.

இதற்கான திட்டம் குறித்த உடன்படிக்கை நேற்று பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்றது. ஐ.நா.அபிவிருத்தித் திட்டப் பிரதிநிதி மிக்கேல் பேக்மியு, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த ஆகியோர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

உத்தேச திட்டத்தின் மூலம் 32 கோடி ரூபாய் கிடைக்கின்றது என பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார். போர் ஆரம்பமான பின்னர் வடக்கு கிழக்கில் சுமார் 15 இலட்சம் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சுமார் 1,50,000 மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டதாக அவர் கூறினார்.

2006ஆம் ஆண்டளவில் முழு இலங்கையையும் கண்ணிவெடிகள் அற்ற பிரதேசமாக மாற்றுவது அரசாங்கத்தின் நோக்கம் எனவும் கண்ணிவெடிகள் அகற்றும் திட்டம் இராணுவத்தினரோடு பல அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும். இதற்காக யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய நகரங்களில் மூன்று அலுவலகங்கள் திறக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

- கிளிநொச்சி நகரப் பகுதியில் -

# விடுதலை முரசு கலைஞர்களின் "கனவுகள்" தெருவெளிநாடகம்

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைமுரசு கலைஞர்கள் வழங்கும் புதுவை அன்பனின் "கனவுகள்" தெருவெளி நாடகம் நேற்றுமுன் தினம் முதல் கிளிநொச்சி நகரப் பகுதியில் நடாத்தப் பெற்று வருகின்றது.

மேற்படி தெருவெளி நாடகத்தினை பெருந்திரளான மக்கள் கலந்து நாடகத்தின் கருப்பொருள் உள்வாங்கி செல்வதனைக் காணக் கூடியதாகவுள்ளது.

தற்போது மேற்படி நாடகம் 800க்கும் மேற்பட்ட மேடைகளைத் தாண்டித் தற்போது நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## வீடு, காணி விற்பனை

உருத்திரபுரம் சிவநகரில் புதிய கல்வீடு, மலசலகூடம், கிணறு பயன்தரு மரங்களுடன் 1 ஏக்கர் மேட்டுக் காணியும், 1 1/2 ஏக்கர் வயல் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சோ.வலாம்பிகை,
இல:12/2 சிவநகர்,
உருத்திரபுரம்.
கிளிநொச்சி.

(3670)


## பெயர் மாற்றம்

கிளிநொச்சி 86/2 திருவையாறைச் சேர்ந்த சுகந்தன் ஜெயரூபி ஆகிய நான் எனது மகளின் சுகந்தன் சுலோஜானா என்ற பெயரை 29.08.2003 தொடக்கம் சுகந்தன் சுலோஜினி என பெயர்மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

சு.ஜெயரூபி.
(தாய்)

(3680)

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

கிளி/பன்னங்கண்டி விவசாயிகளால் நடத்தப்படும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

**இடம்:** பன்னங்கண்டி சவாரித்திடல்
**காலம்:** 31.08.2003 (ஞாயிறு)
**நேரம்:** 1.00 மணி
**பிரிவுகள்:** அ.ஆ.இ.ஈ ஆக நான்கு பிரிவுகளாக நடைபெறும்.
**குறிப்பு:** ஈ பிரிவு தரம் பிரித்து வைக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(3684) **பன்னங்கண்டி விவசாயிகள்.**


முருகன் துணை





கிளிநொச்சி மாவட்ட
அருள்மிகு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில்

## மகோற்சவ விஞ்ஞாபனம்

எதிர்வரும் (01–09–2003) ஆவணித் திங்கள் 16ஆம் நாள் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மகோற்சவம் தொடர்ந்து பத்து நாள் நடைபெற்று 11ஆம் நாள் பூங்காவனத்திருவிழாவுடன் நிறைவுபெறும்.

- 09–09–2003 தேர்த்திருவிழா காலை 09.00 மணிக்கு
- 10–09–2003 தீர்த்தத் திருவிழா காலை 10.00 மணிக்கு
- மகோற்சவ காலம் தினசரி பி.ப. 5.30 தொடக்கம் கூட்டுப் பிரார்த்தனையுடன் புலவர் சி.விசாலாட்சி அம்மையாரின் கந்தபுராண தொடர் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறும்..

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

**அறங்காவல் குழு**
கிளி/ கந்தசுவாமி கோவில்

(சி-8475)



# உள் நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல-1846-SRI (SF)

# தரவு பதியுனர் பதவி

திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவப்படுத்தும் பிரிவில் உள்ள தரவு பதியுனருக்கான வெற்றிடங்கள் இரண்டை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். 45 வயதுக்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். நியமனங்கள் திருப்திகரமான சேவையினடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய மூன்று வருட ஒப்பந்த அடிப்படையிலாகும். அவ்வொப்பந்தம் திருப்தியின் அடிப்படையில் மேலும் நீடிக்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள், பிறந்ததிகதி, முன்னைய தொழில்விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுயதரவுகள், மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்கவேண்டும். விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 05-09-2003 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப்பணிப்பாளர், வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திட்டம் (NECORD) இல140, மின்சார நிலையவீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் தபாலுறையின் மேல் மூலையில் குறிப்பிடப்படவேண்டும். அரச திணைக்களம்/அரச கூட்டுத்தாபனங்கள்/சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

### தெரிவு செய்யப்படும் முறை-

நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

### சம்பளம்-

அரசாங்க சேவையிலுள்ள இத்தகைய பதவிகளுக்கு வழங்கப்படும் சம்பளத்துடன் உத்தியோகத்தரின் தகைமை, அனுபவம், ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு சம்பளத்தின் 50 % மேற்படாத தொகையும் வழங்கப்படும்.

### தகைமைகள்

பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்றையுடைய வராயிருத்தல் வேண்டும்.

I. மொழி, கணிதம்/தூயகணிதம்/ஆரம்பகணிதம், பௌதீகவியல் அல்லது விஞ்ஞானம் அடங்கலாக ஐந்து திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் கல்விப்பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

மொழி, கணிதம்/எண்கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 5 "ஏ" அல்லது "பி" தர திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் தேசிய கல்விப் பொதுத்தராதர சான்றிதழ் பரீட்சையில் தோற்றிசித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கணினிநெறியைப் பின்பற்றியவராகவும் MSOffice இல் பூரண அறிவு இருப்பதுடன் விசேடமாக Power Point, Access Date Base and E-Mail இல் அனுபவம் இருத்தல் வேண்டும்.

அத்துடன்

1நிமிடத்திற்கு 40 சொற்கள் கணினியில் தட்டச்சு செய்யக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

**த.லங்காநேசன்**
**திட்டப்பணிப்பாளர்.**

(சி.8476)

# உலக சமயத் தலைவர்கள் மாநாடு கொழும்பில் நடத்த ஜப்பான் முயற்சி


வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிரந்தரமாக முடிவிற்குக் கொண்டு வந்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் உலக சமயத் தலைவர்களின் மாநாடொன்றை இலங்கையில் நடாத்த ஜப்பான் முன்வந்துள்ளது. உலக மதத் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில நடாத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு ஜப்பான் மத்திய ஸ்தம் வகிக்க முன்வந்துள்ளதாக மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் புறக்கணிப்புப் போராட்டம்

(அலுவலக செய்தியாளர்)

வட-கிழக்கு மாகாண பாடசாலைகளில் பணிபுரிந்துவரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தற்போது பாட்சாலைப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக கடந்த 26ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற சங்க செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத் திற்கமைவாக அவசர தொழிற் சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு முல்லை, துணுக்காய் வலயங்களைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக்கல்லூரியிலும், கிளிநொச்சி வலயங்களைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கிளிநொச்சி பல் கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்திலும் நடைபெறும் அவசர கலந்துரையாடலில் சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் வட கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்க முல்லை மாவட்ட இணைப்பாளர் ஜே.மோகன் வேண்டியுள்ளார். (சோ)



ஈராக் சண்டையில் ஈடுபட்டு வந்த அமெரிக்காவின் B52 ரக குண்டு வீச்சு விமானம் பயிற்சியில் ஈடுபடுகிறது

# கடிதங்களை வீட்டில் வைத்திருந்த தபாற்காரனுக்குத்தண்டனை -மும்பையில் சம்பவம்

(பிராஸ்போர்ட்)

61 ஆயிரம் கடிதங்களை உரியவர்களுக்கு விநியோகிக்காமலிருந்த தபாற்காரர் ஒருவருக்கு ஜேர்மனி நீதிமன்றம் ஒன்று 200 மணித்தியாலங்கள் சமூகசேவையில்ஈடுபட வேண்டுமெனத் தண்டனை விதித்துள்ளது.

இதேவேளை, அவருக்கு 10 மாதகால ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இவர் இரண்டரை வருடமாக விநியோகிக்க வேண்டிய கடிதங்களை விநியோகிக்காமல் வீட்டின் அறை ஒன்றில் சேகரித்து வைத்திருந்தமையைப் பொலிசார் கண்டுபிடித்ததையடுத்து இவர் நீதிமன்றில் முன்நிறுத்தப்பட்டு இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# தென்னக்கோனுக்கு பிணைவழங்குவதா இல்லையா கோட்டை நீதவானிடம் தம்புள்ள நீதவான் ஆலோசனை

(கொழும்பு)

**மாத்தளை மாவட்ட பொ.ஐ.மு.எம்.பி தென்னக்கோனுக்குப் பிணை அளிப்பதா இல்லையா என்பது பற்றி தம்புள்ள நீதவான் கோட்டை நீதவானிடம் ஆலோசனை கேட்டுள்ளார்.**

தம்புள்ள ஐ.தே.க. ஆதரவாளர் ஒருவருக்கு கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பாகத் தேடப்படும் மேற்படி எம்.பி.ஜனக பண்டார தென்னக்கோன் கொழும்பு வைத்தியசாலை ஒன்றில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருவதையடுத்து அவரின் உடல் நிலையைத் தனிப்பட்ட ரீதியில் பரிசோதனை செய்ய நீதிமன்றத்தால் முடியாதுள்ளதையடுத்து அவருக்குப் பிணை வழங்குவது அல்லது தகுந்த நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவே நீதவான் மேற்படி ஆலோசனையைக் கேட்டுள்ளார்.

இதறகிடையில் மேற்படி கொலை மிரட்டலோடு தொடர்புடைய அவரின்செயலாளரும் மேலும் அறுவரும் ஏற்கனவே பிணை மறுக்கப்பட்டு எதிர்வரும் 9ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## சிப்பாய் மரணம்

(தென்மராட்சி)

தென்மராட்சி நுணாவில் பகுதியில் பணியாற்றி வந்த சிறிலங்காப் படைச்சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இச்சிப்பாய் மாரடைப்பு நோயினாலேயே உயிரிழந்துள்ளதாக குறிப்பிட்ட முகாமின் படையதிகாரி சாவகச்சேரி பொலிசாருக்கு அறிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த சாவகச்சேரி நீதவான் சடலத்தை உயிரிழந்த சிப்பாயின் சொந்த இடமான காலிக்கு எடுத்துச்செல்ல அனுமதித்துள்ளார்.

ஆயினும் சிப்பாயின் சடலத்தை கொழும்பு சட்டவைத்திய அதிகாரியின் முன்னிலையில் பாரப்படுத்தி உரியமருத்துவ அறிக்கையினை சாவகச்சேரி நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கட்டளை பிறப்பித்துள்ளார்.

# சிறுமி மீது பாலியல் இம்சை புரிந்த வயோதிபர் மீது விசாரணை!

வீட்டில் தனித்திருந்த 13 வயதுச் சிறுமி ஒருவரை பாலியல் இம்சைகளுக்கு உட்படுத்திய வயோதிபர் ஒருவர் கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்களால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி நேற்று பருத்தித்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார். மரணவீடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக சிறுமியின் தாய் தந்தையர் சென்றிருந்த வேளை வீட்டில் தனியாக இருந்த சிறுமியை அயலவரான வயோதிபர் பாலியல் இம்சைகளுக்கு உள்ளாக்கியதாகவும் கூறப்படுகிறது. (27)

# மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் வகையில் ஆட்சிமுறையில் மாற்றம் கொண்டு வரவேண்டும்

## மத்திய அரசிடம் தமிழக முதல்வர் கோரிக்கை

புதுடில்லி மத்தியரசுக் சட்டம் இயற்றும் போது மாநில அரசுகளுடனும் கலந்தாலோசிக்கப் படுமென்று நேற்று மாநிலங்களிடை மன்றக் கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய் அறிவித்துள்ளார். ஜம்மு-காஷ்மீர் தலைநகர் ஸ்ரீ நகரில் நேற்று முன்தினம் எட்டாவது மாநிலங்களிடை மன்றக் கூட்டம் தொடங்கியது.

பலத்த பாதுகாப்புக்களிடையே தொடங்கப்பட்ட இந்தக் கூட்டத்தில், பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி, மாநிலங்களின் முதலமைச் சர்களும் கலந்துகொண்டுள்ளார் கள்.

இக்கூட்டத்தில் பேசிய பிரதமர் வாஜ்பாய், மத்திய, மாநிலங்களிடையே நிலைமை வலிமையான உறவுகள் மூலம் 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ந்த நாடுகளில் ஒன்றாகத்திகழுமென்று கூறியுள்ளார்.

மக்களுக்குச் சிறந்த நிர்வாகத்தை அளிப்பதன் மூலம் நாட்டிற்குத் தேவையானவற்றைச் செய்ய மத்திய அரசு விரும்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மாநில அரசுகளிடையேயான பொது அதிகாரப்பட்டியல் பற்றிய சட்டம் இயற்றும் போது மாநில அமைப்புக்களிடம் கலந்து ஆலோசிக்குமாறு மத்திய அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைப்பொறுப்பாளர்களிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனிடையே மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கும் வகையில் ஆட்சிமுறையை மாற்ற வேண்டுமென்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

ஆனால், தமிழக முதலமைச்சர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. அவரது சார்பில் இக்கூட்டத்தில் நிதியமைச்சர் பொன்னையன், முதலமைச்சரின் உரையை வாசித்துள்ளார். இதனிடையே பிரதமர் வாஜ்பாய் ஸ்ரீநகருக்கு செல்வதற்கு முன்னரும், சென்ற பின்னரும் வீடுகளில் கைக்குண்டுகள் வெடித்துள்ளன.

இதில் பாதுகாப்பில்ஈடுபட்டிருந்த 04 பொலிசார் காயமடைந்துள்ளார்கள். தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.




சான் பிரான்ஸிஸ்கோ நகரில் 10 ஆயிரம் மக்கள் பங்கேற்ற ஈராக் போருக்கெதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

# ஈரானின் அணுவாயுதத் திட்டத்திற்கு உதவுவதை ரஷ்யா நிறுத்தவேண்டுமென அமெ.கோரிக்கை

(வாஷிங்டன்)

ஈரானின் அணுவாயுதத்திட்டத்திற்கு உதவி வழங்குவதை உடன் நிறுத்துமாறு அமெரிக்கா ரஷ்யாவைக் கேட்டுள்ளது.

ஐ.நா.சபையின் அணுவாயுதப் பிரிசோதகர்கள் ஈரானின் அணுவாயு உற்பத்தித் திட்டம் தொடர்பாக குற்றம்சாட்டி விடுத்துள்ள அறிக்கையையடுத்தே அமெரிக்கா இவ்வாறு ரஷ்யாவைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சர்வதேச சமூகங்களின் கேள்விகளைத் திருப்திப்படுத்தும் வகையில் ஈரானின் பதில்கள் அமையவேண்டும். அவ்வாறு அமையும்வரை ரஷ்யா உட்பட ஏனைய நாடுகளும் ஈரானின் அணுவாயுத உற்பத்தித் திட்டத்திற்கான ஒத்துழைப்புக்களை நிறுத்திக்கொள்ளும் என்று நம்புவதாக அமெரிக்க ராஜாங்க திணைக்கள பிரதிப் பேச்சாளர் பிலிப்ரீக்கர் கூறியுள்ளார்..



பிரிட்டனின் றோயல் கடற்படைக்குச் சொந்தமான 105 மி.மீ துப்பாக்கி பொருத்தப்பட்ட எம்.கே.4 உலங்குவானூர்தி.

# உத்தரப் பிரதேசத்தில் முதலமைச்சராக முலாயம் சிங் யாதேவ் தேர்வு

உத்தரப்பிரதேச அரசியல் முடிவுக்கு வந்துள்ளது. புதிய முதலமைச்சராக முலாயம் சிங் யாதேவ் முதலமைச்சராக பதவியேற்கவுள்ளார்.பரபரப்புடன் காணப்பட்ட உத்தரப்பிரதேச மாநில அரசியலில் முக்கிய திருப்பமாக சமாஜ்வாதிக் கட்சித்தலைவர் முலாயம்சிங் யாதேவ் முதலமைச்சராகப் பதவி ஏற்கவுள்ளார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் மாயாவதி பதவி விலகியதையடுத்து மாற்று அரசு ஏற்படுத்த அம்மாநிலச் சட்ட மன்றத்தில் தனிப்பெரும் கட்சியாக விளங்கிய சமாஜ்வாதிக்கட்சி முயற்சி மேற்கொண்டது.அதற்கு காங்கிரஸ், ராஜ்ஜிய காந்திதளம் உட்பட சில கட்சிகள் ஆதரவு வழங்கியதையடுத்து மாநில ஆளுனரிடம் முலாயம் சிங் ஆட்சியமைக்கக் கோரியிருந்தார். மேலும், தனக்கு ஆதரவு வழங்கும் அமைச்சர்களின் பட்டியலையும் வழங்கியுள்ளார். இதனையடுத்து ஆளுனர் முலாயம் சிங் யாதேவ்வை புதிய அரசு அமைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். அதேநேரம், மாயாவதியின் பகுஜன் சமாஜ்கட்சியிலிருந்து ஆறு அமைச்சர்கள் உட்பட பதினொரு எம்.ஏக்கள் விலகி முலாயம் சிங் யாதேவ்வுக்கு ஆதரவு வழங்கியுள்ளார்கள்.

# முஸ்லிம்களின் பாதுகாப்பை எதிர்க்கவில்லை எப்படி வழங்குவது என்பதிலேயே வேற்றுமை

## ரணிலுடனான சந்திப்புக் குறித்து ஜோசப் பரராஜசிங்கம்

முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படுவது என்பதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், எப்படி பாதுகாப்பு வழங்குவது எனும் கொள்கை அடிப்படையில் தான் வேற்றுமையுள்ளது.

இவ்வாறு நேற்று முன்தினம் சிறிலங்கா பிரதமருடனான சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஏற்கனவே முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு கடமையிலுள்ள பொலிசாரை ஈடுபடுத்த முடியும். அப்படியிருக்க முஸ்லிம்களுக்கான பாதுகாப்புக்கென ஆட்சேர்த்தல் நடவடிக்கையில் ஈடுபடுவது இரு இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை பாதிக்கும்.

முஸ்லிம் மதத் தலைவர்கள் கிறிஸ்தவ மதத்தலைவர்கள் மற்றும் இந்து மதத் தலைவர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஒரு குழுவை அமைத்து இவ்வாறான பிரச்சினைகளை சாதகமாக இரு சமூகத்திற்கும் பிரச்சினை ஏற்படாதவாறு தீர்த்து வைப்பதுதான் நல்லது. ஆனால், இதற்கு மாற்று கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

முஸ்லிம்கள் சார்பாகவும் மாற்று கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இதில் தெளிவாக எடுக்கப்பட்ட முடிவு இன ரீதியாக ஆட்கள் சேர்ப்பது தற்போது நல்லதல்ல என நாம் வலியுறுத்தினோம். அந்நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் நாங்கள் இப்பிரச்சினையை அணுக வேண்டுமெனத் தெரிவித்தோம்.

ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாக கூறுகின்றனர்.

இதனைத்தான் நாங்கள் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளதாகவும் கூறுகின்றனர். தனிப்பட்ட ரீதியில் முஸ்லிம்களை மட்டும் தான் எடுக்கப்பட வேண்டுமென்றால் ஏற்கனவே முஸ்லிம் ஊர்காவற்படை அமைத்ததன் பின்னர் முஸ்லிம் தமிழ் மக்களிடையே ஒரு பெரிய விரிசல் ஏற்பட்டதோ அப்படியான நிலை ஏற்படலாம் எனவும், அதனைத் தவிர்ப்பதாயின் அவர்கள் இதனை நன்கு சிந்திக்க வேண்டுமெனவும் கூறினோம்.


ஏனெனில், நாங்கள் கிழக்கு மாகாணத்தில் பிணைந்து வாழ்கின்றவர்கள். இதனால் தான் நாங்கள் இக்கூட்டத்தில் இதை தொடர்ந்து எதிர்வரும் 08ஆம் திகதி மீண்டும் ஒரு முறை நாங்கள் பிரதமருடன் சந்தித்து இரண்டு பகுதியும் பேசி பிரச்சினையை முழுமையாக அணுக வேண்டுமென கூறி முடிவெடுத்தோம்.

# ஊனமுற்றோர் பு.வா. சங்க விளையாட்டுப் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினரின் ஊனமுற்றோருக்கான மாபெரும் துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி நேற்று நடைபெற்றுள்ளது.

மேற்படி போட்டியில் செவிப்புலன் இழந்தவர்களுக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி தருமபுரம் வைத்தியசாலை முன்பாக காலை 6.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து ஊனமுற்றோருக்கான



மூன்றுசில்லு துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் 2ஆம் கட்டைப் பகுதியில் 6.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இரு அணியினரும் ஏ.9 சாலை வழியாக கிளிநொச்சி சந்திரன் ஞாபகார்த்த நினைவுப் பூங்காவை வந்தடைந்தனர்.

மேற்படி போட்டியில் கிளிநொச்சி கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ஊனமுற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (பா)

# நோர்வே அனுசரணையாளரை வெளியேற்றி பின்லாந்தைச் சேர்ந்தோரை அழைக்குக

## சனாதிபதியிடம் ஜே.வி.பி.வலியுறுத்து

(கொழும்பு)

சமாதான முயற்சியில் அனுசரணையாளராகப் பணியாற்றும் நோர்வேயை வெளியேற்றிவிட்டு பின்லாந்தைச் சேர்ந்தவர்களை அழைக்க வேண்டும் என்று ஜே.வி.பி. சிறிலங்கா சனாதிபதியிடம் கோரியுள்ளது.

நேற்று முன்தினம் சனாதிபதி மாளிகையில் ஜே.வி.பி.க்கும் பொ.ஐ. முன்னணிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இரு கட்சிகளும் கூட்டிணைவது தொடர்பாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையிலேயே ஜே.வி.பியினர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

# வடமராட்சி மீனவர்களுக்கு நிவாரணமாக தரமற்ற அரிசி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மீனவர்களுக்கு நிவாரணத்துக்காக வழங்கப்படும் அரிசி தரங்குறைந்ததாகக் காணப்படுவதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் சூரியகுமார் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் இந்நிவாரண அரிசி கல், மண் மற்றும் புழுக்கள் நிறைந்ததாக காணப்படுவதாகத் தெரிவித்த அவர், ஏற்கனவே இராணுவக் கெடுபிடிகளால் நொந்து வறுமைப்பட்டுப் போயுள்ள இப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் இது தொடர்பாக பல கடிதங்கள் சகல தரப்பினருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், எனவே உரிய நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் நீதிமன்றில் இது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (33)

# யாழ். இந்து பழைய மாணவர் சங்கம் கூட்ட அறிவித்தலில் குழப்பம்

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் தொடர்பாக வெளியாகியுள்ள இரு வேறுபட்ட அறிவித்தல்களால் குழப்ப நிலை உருவாகியுள்ளது.

கல்லூரி அதிபர் கடந்த 27-08-2003 அன்று வெளியிட்ட அறிவித்தலின் பிரகாரம் எதிர்வரும் 31ஆம் திகதி பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், இதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் மேற்படி கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளரால் வெளியிடப்பட்ட அறிவித்தல் உள்ளது. இந்த அறிவிப்பின் பிரகாரம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதாக முன்னர் தீர்மானிக்கப்பட்ட பொதுக் கூட்டம் 24-08-2003 சுவடிய செயற்குழு கூட்டத்தில் மூன்று வாரங்களுக்கு அதாவது, 21-09-2003 அன்றைய தினத்திற்கு பிற்போடப்பட்டிருப்பதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு வேறு மாறுபட்ட அறிவித்தல்களால் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்க் குழுக்களுடன் சந்திப்பு

மட்டக்களப்புக்கு நேற்று விஜயம் செய்த போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சன் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளை நேற்றுக் காலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி ஆகிய குழுக்களுடன் மட்டக்களப்பு கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் வைத்து இச்சந்திப்பு நடைபெற்றது.

### சிறிலங்கா..

ஒரு மணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பின் போது யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

### திப்பற்றி...

நீதிமன்ற பதில் நீதவான் வைத்தியசாலைக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்க பருத்தித்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (27)

### புலிகள்....

களின் அக்கறைப்பற்று அலுவலகத்தில் வைத்து சந்தித்து உரையாடிய போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் போர் நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் குறித்தும் அது தொடர்பான முறைப்பாடுகள் குறித்தும் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் பல்வேறு விளக்கங்களை அளித்ததுடன் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்படுவதாக வெளிவந்த செய்திகள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விரிவாக ஆராய்ந்து வருவதாகவும் உண்மை நிலவரம் தொடர்பான அறிக்கை ஒன்றை விரைவில் வெளியிட இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

புலிகள் இவ்விடயம் தொடர்பாக உரிய விபரங்களைத் தந்தால் அவற்றை பரிசீலிக்கத் தயார் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பில் மட்டு. அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், பிராந்திய அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாபா, கல்விப் பொறுப்பாளர் அவனியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இரு...

சுகாதார சேவைப் பரிசோதகர் ஒருவர் கல்லூரியின் வாயிலிலுள்ள சோதனைச் சாவடியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். இது தொடர்பாக அவ்வதிகாரி இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் முன்னிலையில் முறைப்பாடு செய்துள்ளார்.

இப்பாடசாலைகளுக்குச் செல்லும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அரச அதிகாரிகள் போன்றோர் படையினரால் தடுக்கப்பட்டு வருவதாகவும், குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு நிர்வாக சங்க உறுப்பினர்கள் செல்ல வேண்டுமாயின் பாடசாலை அதிபர்களால் சிபார்சு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாகவும் தெரிய வருகின்றது. (27)

### வடக்கு...

காணும் சகல வாய்ப்புக்களையும் பயனற்றுப்போக செய்துவிடும் இது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

தமிழ்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதையே நோக்கமாகக் கொண்டு கடந்த 1994ஆம் ஆண்டு தேர்தல் மூலம் அரசியலில் இறங்குவதாகக் கூறிய சனாதிபதி சந்திரிகாவின் சார்பில் ஊடகப் பேச்சாளர்கள் வெளியிட்ட வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பிரிக்கும் அறிக்கைகள் தமிழ் பிரச்சினைக்கு நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதான அரசியல் தீர்வொன்றைக் காணுவது குறித்து சிங்கள அரசியல் தலைமைத்துவத்தில் தமிழ் மக்கள் கொண்டிருக்கும் பாரிய சந்தேகத்தை மீண்டும் உறுதிப்படுத்துபவையாக அமைகின்றன.

அது மாத்திரமல்ல, இந்த ஆபத்து நேரத்திலும் அச்சுறுத்தலை அச்சம் இன்றி எதிர்கொள்வதற்கு ஒற்றுமையாக நிற்க வேண்டிய தேவை உள்ளது என்பதை இந்த அறிக்கைகள் தமிழ் மக்களுக்கு உணர்த்தியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களின் பாதுகாப்பு வடக்கு-கிழக்கில் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும், ஆனால், அதற்காக வடக்கு-கிழக்கில் பொலிசிற்கான ஆட்சேர்ப்பினை தற்போது நடத்துவதினை நாம் ஆட்சேபிக்கிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் ஆலயம் சென்று திரும்பிய ஆறு இளைஞர்கள் தடுத்து வைப்பு

## - அடையாள அட்டை வைத்திருக்கவில்லை -

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவத்தை முடித்துக் கொண்டு தென்மராட்சியில் அமைந்துள்ள தமது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த சிலரை படையினர் தடுத்து நிறுத்தி சோதனை நடத்தியதுடன் நீண்ட நேரம் தடுத்துவைத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் நாவற்குழி பாலத்திற்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது;

நல்லூர் கந்தனின் தீர்த்தோற்சவத்தை முடித்துக்கொண்டு மாலை 7 மணியளவில் ஆறு இளைஞர்கள் தென்மராட்சியில் உள்ள தமது வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது அடையாள அட்டைகளை காட்டுமாறு படையினர் கோரியுள்ளனர். அவர்கள் அடையாள அட்டைகளை எடுத்துச் செல்லாததால் இரவு பத்து மணிவரை தடுத்து வைக்கப்பட்டதுடன் பின் அவர்களது பெயர், முகவரிகள் பதிவு செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (33)

### ஐ.தே.மு....

வாறு தெரிவித்தார்.

சிறிலங்காவின் பயணத்தைத் தீர்மானிக்க வேண்டியது நாட்டு மக்களே என்றும் அவர் கூறினார். பொதுசன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க இங்கு உரையாற்றுகையில், இன்னும் ஆறு மாத காலத்திற்குள் அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றப்போகின்றோம் என்றார்.

உயிர்த்தியாகம் செய்தாவது ஜே.வி.பியுடன் கூட்டை ஏற்படுத்தப் போகின்றோம். இந்தக் கூட்டணியை அமைக்கும் பேச்சுக்கள் தோல்வியடைந்து விட்டதாக வெளியான அறிக்கைகளில் எவ்வித உண்மையுமில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பதாகவும், வெளிநாட்டுப் படைகளை வரவழைப்பதாகவும் அரசியல் பழையாளிகள் படுகொலை செய்யப்படுவதாகவும் குற்றம் சாட்டும் ஜே.வி.பி. அவற்றிற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் கடந்த திங்கட்கிழமை காலியிலிருந்து பாதயாத்திரையைத் தொடங்கியிருந்தது.

இந்தப் பேரணியில் பொதுசன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களான அர்ஜுனா ரணதுங்க, மங்கள சமரவீர, அநுரா பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கொழும்பில் வைத்து இணைந்து கொண்டனர்.

ரணில் - பிரபா கூட்டு மூலம் நாட்டை பிரிக்க முயற்சி, இதனைத் தோற்கடிப்போம், சமஷ்டி ஆட்சி தேவையில்லை, நாம் இனவாதிகள் அல்ல என்ற பிரதான கோஷங்கள் பேரணியில் எழுப்பப்பட்டன. அத்தோடு, பேரணியிலும் இறுதியாக இடம்பெற்ற பொதுக்கூட்டத்திலும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. (32)

# சீருடைக்கு விண்ணப்பிப்பதற்கான கால எல்லை நீடிப்பு

2004ஆம் ஆண்டிற்கான பாடசாலை மாணவருக்கு இலவச சீருடை வழங்க விண்ணப்பிக்கும் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் 10 ஆம் திகதி வரை சீருடைக்கு விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பொய்ச்சாட்சி சொன்னோருக்கு தலா இரு வருடங்கள் சிறை

(கொழும்பு)

பிந்துனுவெவ தமிழ் இளைஞர்கள் படுகொலை வழக்கில் சந்தேகநபர்களை தப்பிக்க வைக்க பொய்ச்சாட்சி சொன்ன நால்வருக்கு, நேற்று கொழும்பு மேல் நீதிமன்றம் தலா இரு வருட சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. நீதிபதி சரத் அம்பேபிட்டிய முன்னிலையில் நேற்று இவர்கள் முற்படுத்தப்பட்ட போது பொய்ச்சாட்சி சொன்ன குற்றத்திற்காக இவர்களுக்கு மேற்படி தண்டனையை வழங்கி தீர்ப்பளித்தார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.